# தூதன்

தூதன்-25 ஜூன் 2016 தூது-6

கர்த்தாவே சொல்லும் அடியேன் கேட்கிறேன்.
1 சாமுவேல் 3:9

**God only needs a willing vessel to use.**



## தென் இந்தியத் திருச்சபை
## தமிழ் சபை - துபாய்

Private Circulation only

| | |
|---|---|
| சபை போதகர் மடல் | 02 |
| ஆயரம்மா மடல் | 05 |
| ஆராதனை பாடல்கள் | 07 |
| செயலர் மடல் | 08 |
| ஜெபித்தால் விடுதலை | 10 |
| நீங்கள் கிறிஸ்தவரா... | 11 |
| மயில் | 12 |
| தெரிந்த சத்தியம் தெரியாத உண்மை | 14 |
| திருச்சபை ஜெபநாள் | 16 |
| வேதவினா போட்டி | 18 |
| Young Readers Column | 20 |
| Health Tips | 22 |
| Children's Corner | 24 |
| Major Health Issues in UAE | 26 |
| Birthday Celebrants | 27 |
| Wedding Anniversary Celebrants | 31 |

P.O.Box: 8785, Dubai. Ph: 04-2824696, Fax: 04-2826162, Mob: 050-5533645
Website: www. csitamilparishdubai.com, E-mail: csitapar@emirates.net.ae

## திருச்சபை : அழைக்கப்பட்ட இறைமக்களின் திருக்கூட்டம்
## CHURCH : THE CALLED COMMUNITY OF THE PEOPLE OF GOD

கிறிஸ்துவுக்குள் எனதருமை உடன்விசுவாசிகளே,

திருச்சபையின் தலையாம், தலைவராம் இயேசுகிறிஸ்துவின் ஈடு இணையற்ற திருப்பெயரில் நல்வாழ்த்துக்கள். திருச்சபையில் பல்வேறு நிலைகளில் திருப்பணியாற்ற நாம் அழைக்கப்பட்ட அழைப்பை நினைத்து ஆண்டவரைத் துதிக்கிறேன். ஐக்கிய அரபு தேசத்தில் திருச்சபை வரலாற்றில் ஆழத் தடம் பதித்து சான்று பகர்ந்துவரும் நமது தாய்த் திருச்சபையாம் CSI துபாய் தமிழ் திருச்சபையின் தற்போதைய போதகராய் பணியாற்றுவதைக் குறித்து அகமகிழ்கிறேன். ஆண்டவருக்கு நன்றி படைக்கிறேன். தென்னிந்தியத் திருச்சபை பிரதமப்பேராயர் அவர்களுக்கும், மாமன்ற அலுவலர்களுக்கும், நமது சபையின் பாசமிகு செயற்குழு அலுவலர்களுக்கும், உறுப்பினர்களுக்கும், உடன் ஊழியர் அனைவருக்கும், அனைத்து இறைக்குடும்பங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைப் பதிவு செய்கிறேன். ஆண்டவர் இம்மட்டும் நமது திருச்சபையையும், அதன் திருப்பணிகளையும் அற்புதமாக வழிநடத்தினார். இனிமேலும் நடத்துவார். நமக்கென்று ஓர் ஆலயம் எழும்ப இடம் வேண்டி தொடர்ந்து ஊக்கமாய் மன்றாடுவோம்.

திருச்சபையின் இவ்வாண்டு பொதுக்குழுக்கூட்டத்தை (Annual General Body Meeting) நெருங்கும் இம்மாதத்தில் ஒவ்வோர் ஆண்டிற்கும் ஒரு சிறப்பான செம்பொருளை (Theme) மையமாகக் கொண்டு செயல்படுவோமாயின் திருச்சபையின் வழிபாடுகளும் நிகழ்வுகளும் ஒரே நோக்கத்திற்கு நேராய் மிகச்சிறப்பாய் அமையும். திருச்சபை என்பது கிரேக்கத்தில் எக்ளேஷியா (Ecclesia) என்றழைக்கப்படுகிறது. அதிலிருந்து பிறந்ததுதான் KIRK என்பதும் CHURCH என்பதுமாகும். புதிய ஏற்பாட்டில் ஏறக்குறைய 110முறை இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. “கூட்டுவிக்கப்பட்ட மக்களின் பொதுக்கூட்டம்” (The community of the called people) என்பது இதன் பொருளாகும். ஆனால், இப்படி அழைக்கப்பட்டவர்கள் தங்களுக்காக மட்டும் திருப்பணியாற்றாமல் இறைவனின் முழு உலகிற்கும் பணிசெய்யும் பிரதிநிதிகளாகவும் அழைக்கப்பட்டுள்ளார்கள் என்பது இதன் பரந்து விரிந்த பொருளாகும் (From local to Global ministry). ஆகவே திருச்சபைக் கூட்டத்திற்கு உள்ளேயும், வெளியேயுமுள்ள இருமடிப்பு ஊழியமாக சபைப்பணி விளங்கவேண்டும் (Two fold ministry of the church to serve within and to serve outside the compound or gathering).

எக்ளேஷியா என்பது பொதுவாக கிரேக்கத்தில் சமயச்சார்பற்ற (Secular) சொல்லாகும். ஆகவே சமய, இன, மொழி, புவி எல்லைகளைக் கடந்தும் செயல்படும் திருக்கூட்டமே திருச்சபை. இது ஒரு மக்கள் இயக்கம். எபிரேய மொழியில் சபைக்குப் பயன்படுத்தப்படும் காஹால் (Kahal) என்ற வார்த்தை யாவேயால் அழைக்கப்பட்டு, கூட்டுவிக்கப்பட்ட கூட்டம் (The called community of Yahweh) என்று பொருள்படுகிறது. ஆனால், அதே ஆண்டவர் எகிப்தியரைக் கப்தோரிலிருந்தும், சீரியரைக் கீரிலிருந்தும் அழைத்து வந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்தக் கல்லின்மீது என் சபையைக் கட்டுவேன் என்று பேதுரு அடிகளாரைத் திருநிலைப்படுத்திய ஆண்டவர் இயேசுகிறிஸ்துவைத் தலைவராகக்கொண்டு அப்போஸ்தலர்களால் உருவாக்கப்பட்ட, அனைவரையும் உள்ளடக்கிய தூய திருக்கூட்டமே திருச்சபை (We believe in ONE, HOLY, CATHOLIC & APOSTALIC CHURCH). முதலில் இயக்கமாக (movement) உருவான திருச்சபை நாளடைவில் பல நாடுகளில், நகரங்களில் பரந்து விரிந்தபோது சபையை நிர்வகிக்க அப்போஸ்தலர்கள் தம் கைகளை வைத்து திருப்பொழிவு செய்து முப்படிநிலையை (Trifold ministry) ஊழியங்களை உருவாக்கினர். அவையாவன: கண்காணிகள் (Bishops), மூப்பர்கள் (Presbyters) மற்றும் உதவிக்காரர்கள் (Deacons & Deaconnesses) (பார்க்க : 1 & 2 தீமோத்தேயு). இது தவிர்த்து பல்வேறு திருப்பணிப் பொறுப்புக்களையும் ஆண்டவர் சபையின் பக்திவிருத்திக்கென்று ஏற்படுத்தினார் (எபே.4:12).

கி.பி. 4-ம் நூற்றாண்டில் ரோம ஆட்சியின் அரசு சமயமாகக் கிறிஸ்தவமும், அரசன் கான்ஸ்டன்டைனின் சொந்த மீட்பராகக் கிறிஸ்துவும் ஏற்கப்பட்ட பிறகு சபை இன்னும் வேகமாய் வளர்ந்தது. அது ரோமச் சபையாக (Roman Church or Roman Catholic Church) என்று உருவானது. Catholic என்பது 'அனைத்தையும் உள்ளடக்கிய' அல்லது 'பொதுவான' எனப் பொருள்படும். காலப்போக்கில் இச்சபை இரு பெரும்பிரிவாகப் பிரிந்து கிழக்கத்திய வைதீக சபை (Eastern Orthodox Church) எனவும், மேற்கத்திய கத்தோலிக்க சபை (Western Catholic Church) எனவும் பிளவுபட்டாலும், இரு சபைகளும் வளர்ந்தன. 16-ம் நூற்றாண்டில் புனிதர் மார்ட்டின் லூத்தர் அவர்களால் இறைமக்கள் அல்லது பொதுநிலையினரை (lay people) முன்னிறுத்தி 'ஆண்டவரை நம்பும் அனைவரும் ஆசாரியர்களே' (Priesthood of all believers) என்ற விசுவாசத்திலே சீர்திருத்தத் திருச்சபை (Reformed / Protestant church) உருவானது.

இந்தச்சபையும் வளர்ந்து பெருகிக்கொண்டே இருக்கிறது. திருப்பொழிவு பெற்ற ஆசாரியரும், பொதுநிலையினரும் இணைந்து சபைநிர்வாகம் செய்யும் Democratic முறை உருவானது.

சீர்திருத்த சபைகளின் மிகப்பெரிய ஐக்கிய திருச்சபையான தென்னிந்தியத் திருச்சபை (Church of South India) நான்கு பெரிய சபைகளான Anglican, Methodist, Presbyterian மற்றும் Congregational சபைகளின் ஒன்றிப்பின் அடையாளமாய் விளங்கி (World's largest united and uniting church) இந்திய எல்லையைக் கடந்து பல நாடுகளிலும் பரந்து விரிந்துள்ளது. ஐக்கிய அரபு தேசத்தின் மிகப்பெரிய சபையான நமது துபாய் தமிழ்த்திருச்சபை பல CSI சபைகளின் தாயாக விளங்கி வருகிறது. அதன் அவயவங்களாக கிறிஸ்துவைத் தலைவராகக் கொண்டு நாம் தொடர்ந்து சான்று பகர்வோமாக.

திருமறையின் வெளிச்சத்தில திருச்சபை என்பது கடவுளின் இஸ்ரவேல் (கலா.6:10, 1 கொரி.10:18, 1 பேதுரு 1:1), கிறிஸ்துவின் உடல் (ரோமர் 12:5, 1 கொரி.12:27), கிறிஸ்துவின் மணவாட்டி (வெளி.21:2, யோவான் 3:29, 2 கொரி.11:2), கடவுளின் வீடு / வீட்டார், விசுவாசக் குடும்பம் (எபே.2:19, கலா.6:10), மந்தை (லூக்கா 12:32, மத்தேயு 26:31, யோவான் 10:1-18), திராட்சைச்செடி (யோவான் 15:1-8), கடவுளின் மாளிகை / கட்டிடம் (1 கொரி.3:9, எபே.2:21), ஆபிரகாமின் சந்ததி (கலா. 3:29), தூய ஆசாரியர் கூட்டம் (1 பேதுரு 2:5, 9-10), கடவுளின் கோவில் ( 1 கொரி.3:16, 2 கொரி. 6:16, எபே.2:21). இக்குறிப்புகள் அனைத்திலுமே எக்ளேஷியா பதம் பயன்படுத்தப்படுகிறது. கிறிஸ்துவின் சொல், செயல், பாடு, மரணம் மற்றும் உயிர்ப்பில் உருவான திருச்சபை கிறிஸ்துவைப்போலவே சமய, இன, மொழி, பண்பாட்டு எல்லைகளைக் கடந்து சான்று பகரவேண்டும். CSI துபாய் தமிழ்த்திருச்சபையாக நாமும் கிறிஸ்துவைப் பின்பற்றி அன்பு, இரக்கம், சகோதரத்துவம், பகிர்வு, தியாகம், கருணை, விட்டுக்கொடுத்தலில் வளருவோம்! கிறிஸ்துவின் தலைமையில் ஒரே குடும்பமாய் இயங்குவோம்!!

கிறிஸ்துவுக்குள் யூதனென்றுமில்லை, கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்பதுமில்லை, சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றுமில்லை, பெண்ணென்றுமில்லை (கலா.3:28).

இறைப்பணியில் ஆயர்,
அருள்திரு. கிறிஸ்தோபர் ரத்தினசாமி.

## சலிப்பின்றி உழைத்த லீதியாள்
(அப்போஸ்தலர் நடபடிகள் 16:12-25,40, பிலிப்பியர் 1:1-10)

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,

விசுவாசத்தை துவக்குகிறவரும், முடிக்கிறவருமாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் இப்புதிய மாத நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த மாதம் முழுவதிலும் நம்மைக் காப்பாற்றி, ஜீவன் தந்த கர்த்தாதி கர்த்தருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக. இந்த மாதத்திலும் திருச்சபையின் வரலாற்றில் இடம்பெற்ற பிலிப்பு சபையின் பெண் அப்போஸ்தலர் லீதியாளைப் பற்றி பார்ப்போம்.

லீதியாள் என்ற பெயருக்கு குனிதல் அல்லது வளைந்து கொடுத்தல் என்று பொருள். அந்நாட்களில் பெண்களிடையே மிக பிரபலமான பெயராகவும் விளங்கியது. தியத்தீரா ஊரைச்சேர்ந்த இவள் அந்த ஊருக்கும், பிலிப்பி பட்டணத்திற்கும், ஆண்டவரின் ஊழியக்காரியாக பெருமை சேர்த்தவள். தியத்தீரா என்ற ஊர் மக்கதோனியாவின் ஒரு குடியிருப்பு பகுதியாகும். இந்த ஊரில் யெகோவாவாகிய கர்த்தரை மட்டும் நம்புகிற தீவிர யூதர்களும் வசித்து வந்தார்கள். இந்தச் சவாலான சூழ்நிலையில் ரோமர், யூதர், புற இனத்தவர் மத்தியில் சலிப்பின்றி உழைத்த லீதியாளைக் குறித்து சில சிந்தனைகளை முன் வைக்கிறேன்.

1.கடின உழைப்பின் பெண் (Hard Working Woman): தியத்தீரா ஊரின் தண்ணீர் துணிகளுக்குச் சாயம் சேர்க்கின்றதற்கு மிகவும் உதவிகரமாய் இருந்த தண்ணீராகும். அங்கே பல்வேறு வகையான துணிகளுக்கும் நிறச்சாயங்கள் மிகச்சிறப்பாக அமையும். அதில் இரத்தாம்பரமும் ஒன்று. அது மிகவும் விலையுயர்ந்த ஆடை. அந்தத் தொழிலை மிகச்சிறப்பாகச் செய்து கடினமாக உழைத்து முன்னேறிய ஒரு பெண்ணாக லீதியாளைப் பார்க்கிறோம் (அப்.16:14). அவரது திறமை, உற்சாகம், தலைமைத்துவம், விடாமுயற்சி, மனஉறுதி போன்றவற்றால் விற்பனைகள் அதிகம் செய்து மக்களிடத்திலே உழைப்பின் வழியாக முன்னேறின சிறந்த பெண்ணாகக் கருதப்பட்டாள்.

2.பக்தியுள்ள பெண் (Devout Woman): லீதியாள் யூத பாரம்பரியத்தையோ அல்லது யூதம் தழுவிய பாரம்பரியத்தையோ சேர்ந்தவராக இருக்கவேண்டும் (அப்.16:14). ஏனென்றால் அவளது பக்திவாழ்க்கை திருமறையில் மிகச்சிறப்பாக சுட்டிக்காட்டப்படுகிறது. பவுல் சொல்லியவைகளைக் கவனிக்கும்படி கர்த்தர் அவள் இருதயத்தைத் திறக்கிறதும், தினமும் காலையில் அவள் ஆற்றங்கரைக்குச் சென்று தனி ஜெபம் செய்கிறதுமான பக்தியுள்ள பெண்ணாக வேதாகமத்தில் காட்டப்படுகிறாள் (அப்.16:13,14).

3.கிறிஸ்தவ பண்புள்ள பெண் (Christian Woman): தானும் தன் வீட்டாரும் திருமுழுக்கு என்னும் சாக்கிரமெந்தினால் முதலில் விசுவாச முத்திரையிடப்பட்டு பாவமன்னிப்பின் நிச்சயத்தோடு வாழவேண்டும் என்கின்ற அர்ப்பணிப்பு அவரது கிறிஸ்தவ பக்தியைக் காட்டுகிறது (அப்.16:15). அதுமாத்திரமல்ல, கூட்டம் கூடுகின்ற பொதுவான வேளையிலே அவரும் அவரது வீட்டாரும், யூதர்களும், ரோமர்களும் சூழ்ந்த அந்த நகரத்திலே பொதுத் திருமுழுக்கு (Public Baptism) பெறுவது ஆண்டவர் இயேசுவின்மீது அவர் வைத்த நம்பிக்கையின் தைரியத்தைக் காட்டுகிறது. இதுபோலத்தான் பெந்தேகொஸ்தே நாளில் மூவாயிரம் பேர் திருமுழுக்குப் பெற்றனர். தான் மாத்திரம் அல்ல, தன் வீட்டாரையும் வேறு அநேகப் பெண்களையும் அவர் ஆண்டவருக்குள் அழைத்து வந்தார் (அப். 16:13,15).

4.உபசரிக்கும் பெண் (Hospitable Woman): லீதியாளின் வாழ்க்கையில் ஏற்பட்ட மனமாற்றத்தின் காரணமாக அவர் தம் வீட்டிற்கு ஊழியக்காரர்களை வருந்தி அழைக்கிறார், உபசரிக்கிறார் (அப்.16:15). இதன் வழியாக அவருடைய அன்பும், இரக்கமும், கனம் பண்ணுவதில் ஒருவருக்கொருவர் முந்திக்கொள்ளுங்கள் என்ற பண்பும் வெளிப்படுகிறது. பவுலையும், சீலாவையும் சிறைச்சாலையிலிருந்து காயப்பட்ட கைதிகளாய் இருந்தாலும் அரவணைத்து ஆதரிக்கிற லீதியாளாகவும் நாம் பார்க்கிறோம் (1பேதுரு 4:9, 1தீமோத்தேயு 5:10, எபிரெயர்13:2).

5.திருச்சபையின் பெண் (Woman of the Church): லீதியாளின் வீடு ஊழியர்களை உபசரிக்கும் வீடு மாத்திரமல்ல, பிலிப்பு பட்டணத்தின் கிறிஸ்தவ ஐக்கியம் வழிபாட்டுடன் வளருவதற்கு திறந்து கொடுக்கப்பட்ட திறப்பின் இல்லம் (பிலிப்பியர் 1:1-7). பிலிப்பி பட்டண விசுவாசிகளின் உடன் பங்காளிகளாகவும், பக்தி மற்றும் பரிவு கொண்ட குணசாலியான பெண்ணாகவும் விளங்கும் லீதியாளைப்போன்று நாமும் தனிப்பட்ட, குடும்ப, திருச்சபை வாழ்வில் நற்பேறு பெற்றவர்களாக விளங்கக் கடவுள் அருள்புரிவாராக! ஆமென்.

இறைப்பணியில்,
திருமதி.தீபா கிறிஸ்தோபர்,
ஆயரம்மா, பெண்கள் ஐக்கிய சங்கத்தலைவி.

## வேத வகுப்பு ஆராய்ச்சி

முதலாம், மூன்றாம் மற்றும் ஐந்தாம் புதன் கிழமைகளில்
இரவு 8:00 மணிக்கு போதகர் இல்லத்தில் நடைபெறும்

## ஆங்கில ஆராதனை

முதல் மற்றும் மூன்றாம் வாரம் வெள்ளிக்கிழமை தோறும்
காலை 6:00 மணி முதல் 7:15 மணி வரை
திருவிருந்து ஆராதனை ஆங்கிலத்தில் நடைபெறும்.

## பாமாலை - கீர்த்தனை

ஆராதனை ஆரம்ப கவி : பாமாலை 11 சேனையின் கர்த்தா

ஆராதனை இறுதி கவி : பாமாலை 204 கவி 4 தெய்வ ஆசீர்

### 03-06-2016

| | | |
|---|---|---|
| பாமாலை | 43 | விண்ணோர்கள் போற்றும் ஆண்டவா |
| பாமாலை | 134 | அருள்நாதா நம்பி வந்தேன் |
| கீர்த்தனை | 14 | தருணம் ஈதும் காட்சி |
| கீர்த்தனை | 18 | பாடித்துதி மனமே பரனை |
| கீர்த்தனை | 147 | பரனே திருக்கடைக்கண் பாராயோ |

### 10-06-2016

| | | |
|---|---|---|
| பாமாலை | 15 | போற்றிடு ஆன்மமே |
| பாமாலை | 100 | பாவீ கேள் உன் ஆண்டவர் |
| பாமாலை | 41 | நேர்த்தியானதனைத்தும் |
| கீர்த்தனை | 126 | நம்பி வந்தேன், மேசியா, நான் |
| கீர்த்தனை | 200 | மறவாதே மனமே |
| கீர்த்தனை | 34 | சருவ லோகாதிபா நமஸ்காரம் |

### 17-06-2016

| | | |
|---|---|---|
| பாமாலை | 42 | மா மாட்சி கர்த்தர் |
| பாமாலை | 166 | சபையின் அஸ்திபாரம் |
| கீர்த்தனை | 159 | என் சிலுவை எடுத்து, என் இயேசுவே |
| கீர்த்தனை | 164 | தந்தேன் என்னை இயேசுவே |

### 24-06-2016

| | | |
|---|---|---|
| பாமாலை | 119 | ரட்சா பெருமானே பாரும் |
| பாமாலை | 137 | எந்தன் ஜீவன் இயேசுவே |
| பாமாலை | 190 | இயேசு எங்கள் மேய்ப்பர் |
| கீர்த்தனை | 125 | தேவபிதா எந்தன் மேய்ப்பன் |
| கீர்த்தனை | 105 | ஐயையா, நான் வந்தேன் |
| கீர்த்தனை | 124 | துங்கனில் ஒதுங்குவோன் |

கர்த்தரின் பெரிதான கிருபையினால் 2016-ல் 5 மாதங்களைக் கடந்து 6-வது மாதத்தைக் காணச்செய்த கர்த்தருக்கு கோடானுகோடி நன்றிகளை ஏறெடுக்கிறோம். இந்த ஜூன் மாதம் நமக்கு ஆசீர்வாதமாக இருக்க கர்த்தரிடம் ஜெபிப்போம்.

6-5-2016 அன்று உழைப்பாளர் தினம் நினைவுகூரப்பட்டு நமது சபை ஆண்கள் ஐக்கிய சங்கம் கேம்ப் ஊழியர்களுடன் சேர்ந்து காலை ஆராதனையில் பாடல்கள் பாடி மகிழ்வித்தனர். அதில் பங்கேற்ற யாவருக்கும் நன்றிகளை கூறிக்கொள்கிறோம். அன்றைய தினம் IEM General Secretary Rev.Dr.Raja Singh Elias அவர்கள் செய்தியைப் பகிர்ந்து கொண்டார்கள். முதல் ஆராதனையில் Bro.Isaac Joe பங்குபெற்று செய்தியைக் கொடுத்தும், பாடல்கள் பாடியும் சிறப்பித்தார்.

13-05-2016 செவிலியர் தினம் அனுசரிக்கப்பட்டது. அன்றைய தினம் செவிலியர்கள் சிறப்பு ஆராதனை நடத்தியும், பாடல்கள் பாடியும் சிறப்பித்தார்கள். அன்றைய தினம் லத்திபா மருத்துவமனையில் Free Medical check up ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 102 பேர் கலந்து பயன்பெற்றனர். தொடர்ந்து 20-05-2016-ம் அன்றும் Medical Checkup நடந்தது. இதை ஒழுங்குபடுத்திக் கொடுத்த Mrs.Ruth Anitha, Mr.Jefferson மற்றும் ஏனைய செவிலியர்களுக்கும் திருச்சபையின் சார்பில் நன்றி கூறுகிறோம்.

13-05-2016 அன்று பெந்தகோஸ்தே திருநாளும், 20-05-2016 அன்று திரித்துவத் திருநாளும் ஆசரிக்கப்பட்டது. 27-05-2016 அன்று Junior Church பிள்ளைகள் ஆராதனையை நடத்திச் சிறப்பித்தார்கள். பாடல்கள் பாடியும் மகிழ்வித்தனர். இதில் பங்கேற்ற அனைத்து பிள்ளைகளையும், அவர்களைப் பயிற்றுவித்த ஆசிரியர்கள் மற்றும் பொறுப்பாளர் Mrs.Rachel Manuel யாவரையும் பாராட்டி வாழ்த்துகிறோம். அன்றைய தினம் JSS International School Campus-ல் பிள்ளைகளுக்கு retreat நடைபெற்றது. பிள்ளைகளுக்கு சபையின் சார்பாக பரிசுகள் வழங்கப்பட்டன.

13-5-2016 அன்று முதல் வாக்காளர்கள் பட்டியல் ஆலயத்தின் வெளியே display செய்யப்பட்டிருந்தது. தொடர்ந்து அடுத்த இரண்டு வாரங்களும் Display செய்யப்பட்டிருந்தது.

அங்கத்தினர்கள் பார்த்து அதில் ஏதும் சந்தேகங்கள் இருந்தால் ஆயர் அவர்களுக்கு சம்மந்தப்பட்ட அங்கத்தினர் எழுத்து மூலம் தெரிவித்து Clarify பண்ணிக்கொள்ளலாம் என்று அறிவிப்பு கொடுக்கப்பட்டது. 15-05-2016 அன்று Parsonage guest room கூரை இடிந்து விழுந்தமையால் வேறு Villa பார்க்க முடிவு செய்யப்பட்டுள்ளது. கர்த்தரின் பெரிதான கிருபையால் யாருக்கும் எந்த சேதமும் ஏற்படவில்லை

26-05-2016 அன்று Fujairah-விலும், 27-05-2016 அன்று Dubai மற்றும் RAK -விலும் கடந்த 3 வருடமாக உதவிப் போதகராகப் பணியாற்றி தாயகம் திரும்பும் Rev.Samuel Jebaraj அவர்களுக்கு பிரிவு உபசார விழாவும், புதிய உதவிப் போதகராக திருநெல்வேலி Diocese-ல் இருந்து வந்துள்ள Rev.Allwin Bright அவர்களுக்கு வரவேற்பு விழாவும் நடைபெற்றது. அவர்கள் 01-06-2016 முதல் பொறுப்பேற்க உள்ளார்கள்.

ஏற்ற நேரத்தில் பொறுப்பேற்க உதவிய Moderator அவர்களுக்கும், CSI Synod பொறுப்பாளர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

சிங் ரெத்னம், செயலர்.

# வருந்துகிறோம்

"கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்"

நமது சபையைச் சேர்ந்த
Mr. Paul Durai Christhu Rajan அவர்களின் தாயார்
Mrs. Chandra Paul Durai அவர்கள் 04-05-2016 அன்றும்

நமது சபையைச் சேர்ந்த
Mr. Bright Chella Kumar அவர்களின் தகப்பனார்
Mr. Chellathangam அவர்கள் 23-05-2016 அன்றும்

நமது சபையைச் சேர்ந்த
Mrs. Merlin Vanitha Kiran அவர்களின் தகப்பனார்
Mr. Sundarsingh Ebenezer அவர்கள் 26-05-2016 அன்றும்

நமது சபையின் முன்னாள் போதகர்
Rev. J.Stephen அவர்கள் (1994-1997 ஆண்டுகளில் பணியாற்றியவர்) 28-05-2016 அன்றும்

கர்த்தருக்குள் நித்திரை அடைந்துள்ளார்கள்.

# ஜெபித்தால் விடுதலை

சிறைப்பட்டான் பேதுரு செய்துவிட்டான் ஏரோது
குறைகண்டோன் யாரது ? கொதித்தெழுந்தோர் போரிது
இறைபக்தன் இறைவேண்டி எதிரொலி அதிர்அதிருது
சிறைமீட்டான் இறைதூதன் தெய்வத்தின் கட்டளைக்கு

வந்துவிட்டான் வெளியேபேதுரு விரும்பிவந்தான் ஜெபவீடு
தந்துவிட்டான் சிறுதட்டு கதவருகே நின்றுகொண்டு
வந்துபாத்தாள் ரோதைப்பெண்டு வாயடைத்து மலைத்துச்சென்று
வந்திருப்போன் சிறைப்பேதுரு என்றதையாரும் நம்பாது

மீண்டுந்தட்டு கேட்டுவந்து கண்டுகொண்டார் அவன்உரு
தாண்டிவந்து பாதைகுறித்து பேதுரு தந்தபேச்சு
தீண்டிவிட்ட நெருப்பாச்சு ஜெபவீரர் துடிதுடிப்பு
காணாக்காட்சி கண்முன்னே கொண்டுவந்த சிலிர்ப்பு

அக்கணமும் வந்துவிட்டது மக்கள்முன் கொண்டுவருவது
தக்கநாள் குறித்துவிட்டது பஸ்காப்பண்டிகை முடிந்துவிட்டது
அத்தினத்தின் முன்னிரவு இருசங்கிலி கைகளில்கட்டி
பக்கத்துக் கொருவன்பிடித்து உறங்கிவிட்டார் இருள்இரவு

முன்காவல் பின்காவல் தாண்டிவந்து தேவதூதன்
தன்முன்னே பேதுரு கண்கூசப் பிரகாசித்தான்
தன்கையாலே பேதுருவிலாவில் தட்டிஎழுப்பி அணியணிந்து
தன்னுடனே வருகவென்றான் பேதுருவும் உடன்தொடர்ந்தான்

நடப்பதெல்லாம் மெய்யென்றறிய கூடாமலே கனவென்றிருந்தான்
அடுத்துவந்த முதற்காவல் தொடுத்துவந்த இரண்டாங்காவல்
கடந்துகண்ட இருப்புக்கதவு நகரத்துள் போகிறது
படக்கென்று தானேதிறந்தது போகவழி விட்டுவிட்டது

வீதிவழி போகையிலே தூதுவனும் மறைந்துவிட்டான்
பாதிவழி கடக்கையிலே பேதுருவும் உணர்ந்துவந்தான்
ஏதோபெறிதட்டி உணர்ந்துகொண்டான் நடப்பதெல்லாம்
உண்மையென்று
பாதுகாக்கத் தேவன்தந்த ஜெபத்துக்குப் பதிலென்றான் !

ஆதாரம் : அப்போஸ்தலர் 12:1–17
கவிதை எண் : 188 கவிதை ஆக்கம் : மணிமுத்து

# நீங்கள் கிறிஸ்தவரா...

என்னைச் சிநேகிக்கிறவர்களை நான் சிநேகிக்கிறேன்,
அதிகாலையில் என்னைத் தேடுகிறவர்கள் என்னைக் கண்டடைவார்கள்
நீதிமொழிகள் 8:17

ஒரு
உயர்நிலைப்பள்ளி
அதன் உள்ளே...
ஒரு வகுப்பறை
இங்கே...
முப்பது மாணவர்கள்
படிக்கிறார்கள்.
பாடம் நடத்துகிற
ஆசிரியர்,
மாணவர்கள்
அனைவருக்கும்
ஒரேவிதமாகத்தான்
படிப்பு
சொல்லித் தருகிறார்.
எனினும்...
இங்கே... ஒரு
உண்மை
உதயமாகிறது.
அதிக
மதிப்பெண் பெறும்
அறிவுசால்
மாணவர் மீது
ஆசிரியருக்கு
அன்பு வருவது
இயல்புதானே.
கர்த்தருக்கும்
நாம் அனைவரும்
சமமே.
இரண்டுவித பார்வை
இறைவனுக்கு
ஏதப்பா...
தாசிக்கும்
ஆசி
வழங்கியரப்பா
நம் இயேசப்பா
இருந்தாலும் கூட
கர்த்தரின் உணர்வில்
இருப்பவரை
சிநேகிப்பவரை
கர்த்தரின்
அருள்பார்வை
அவர்மீது படும்.
கர்த்தரின்
ஆசீர்வாதம்
அவரைத் தொடும்
சகல வினையும்
அவரை விட்டுவிடும்.
கர்த்தரே நமக்கு
சிநேகிதராகிறார்.
ஆரவாரம் அடங்கி
அமைதி
தழுவும் காலம்
மரம் செடி கொடிகள்
விழித்தெழும் காலம்.
மனிதருக்கு...
மனமும் மதியும்
மயக்கம்
தெளியும் காலம்.
அதுவே...
ஆண்டவர் விரும்பும்
அதிகாலை நேரம்.
அரண்டு புரண்டு
உறக்கம் தொடர்வதா
இல்லை..
துயிலிலிருந்து
எழுவதா...
கர்த்தரைத்
தொழுவதா
அன்பரே...
அதிகாலை
ஆன்மீக வாழ்வுக்கு
அழைக்கும் காலம்.
கர்த்தரைத்
தேடும் நேரம்
அனுதினமும்
முழங்காலிட்டு
முனைப்புடன்
கர்த்தரைத்
துதிப்போம்
ஜெபிப்போம்
கண்டடைவோம்
கர்த்தரை.
கர்த்தரின்
தரிசனமும்
கரிசனமும்
கிடைக்குமப்பா
வாழ்வில்
வேறென்ன
வேண்டுமப்பா..
சான்றோர்
சென்றவழி
செல்வோமா...
கர்த்தரிடம்
அடைக்கலம்
ஆவோமா...
பொன்னும் வேண்டேன்
பொருளும் வேண்டேன்
மண்ணும் வேண்டேன்
மனையும் வேண்டேன்
பிறர் தரும்
புகழும் வேண்டேன்
மட... நெஞ்சே...
கர்த்தரே
எல்லாம் என்றிரு
அவர் தரும்
வரமே
நன்றென்றிரு.

என்றும் அன்புடன், T. ராஜ்குமார். Mens Fellowship.

மயில் இந்தியாவின் தேசிய பறவை ஆகும். பளபளக்கும் விசிறி போன்று தோகையை விரித்தாடும் அற்புத காட்சிக்கு மயில்கள் புகழ்பெற்றவை. கண்ணைப் பறிக்கும் வண்ணத் தோகையை விரித்து மயில் ஆடும் போது, சகலத்தையும் சிருஷ்டித்த நம் தேவனின் வல்லமைக் கண்டு யார் தான் வியக்காமல் இருக்க முடியும். "கர்த்தாவே, தேவரீர், மகிமையையும் கனத்தையும் வல்லமையையும் பெற்றுக் கொள்ளுகிறதற்குப் பாத்திரராயிருக்கிறீர், நீரே சகலத்தையும் சிருஷ்டித்தீர், உம்முடைய சித்தத்தினாலே அவைகள் உண்டாயிருக்கிறவைகளும் சிருஷ்டிக்கப் பட்டவைகளுமாயிருக்கிறது என்றார்கள்" (வெளி 4:11). மயில்கள் பார்க்க மிகவும் அழகாக இருப்பதால் சாலமோன் அரசன் தன்னுடைய அரண்மனைப் பூங்காவின் அழகினைக் கூட்டுவதற்கு மயில்களை இந்திய துணைக் கண்டத்திலிருந்து இறக்குமதி செய்தான் என்பது வரலாற்று உண்மை. "ராஜாவுக்குச் சமுத்திரத்திலே ஈராமின் கப்பல்களோடேகூடத் தர்ஷீசின் கப்பல்களும் இருந்தது, தர்ஷீசின் கப்பல்கள் மூன்று வருஷத்துக்கு ஒருதரம் பொன்னையும், வெள்ளியையும், யானைத் தந்தங்களையும், குரங்குகளையும், மயில்களையும் கொண்டுவரும்" (1 இராஜாக்கள் 10:22). இந்த பறவைகள் நம்முடைய கண்களுக்கு விருந்தளிக்கலாம். ஆனால் அதன் குரலோ இனிமையாக இருக்காது. இரை தேடிக் கண்டுபிடிக்கும் வரை அவற்றின் ஓலம் மாலைப் பொழுதின் அமைதியை குலைத்து விடும். ஆனால் குயில் கருமை நிறமாக இருந்தாலும் அதன் குரல் இனிமையிலும் இனிமை. மக்களின் வெளித்தோற்றம் மட்டும் நன்றாக இருந்தால் போதாது. அவர்களின் உள்ளத்தின் நினைவுகளும் வாயிலிருந்து புறப்படும் வார்த்தைகளும் இனிமையாக இருக்க வேண்டும். "உங்களில் ஒருவன் தன் நாவை அடக்காமல், தன் இருதயத்தை வஞ்சித்து, தன்னைத் தேவபக்தியுள்ளவனென்று எண்ணினால் அவனுடைய தேவபக்தி வீணாயிருக்கும்"(யாக் 1:26). நிச்சயமாகவே மயிலுக்கு ராஜ தோரணை இருக்கிறது. இது கர்வமும் ஆடம்பரமுமான தோற்றமுடையது. அதனால் தானோ என்னவோ அகந்தை கொண்ட மனிதரை விவரிப்பதற்கு "மயிலைப் போல கர்வம் பிடித்த" என்ற சொற்றொடர் சில மொழிகளில் நடமாடுகிறது. அகந்தை என்ற பண்பை திருமறை பல இடங்களில் கண்டிக்கிறது. "மனுஷனுடைய அகந்தை அவனைத் தாழ்த்தும், மனத்தாழ்மையுள்ளவனோ கனமடைவான்" (நீதி.29:23). லூக்கா 1:51ல் "அகந்தையுள்ளவர்களைச் சிதறடிக்கிறார்" என்று பார்க்கிறோம். பெருமையினால் வீழ்ச்சியடைந்த ஆவிகளுள் முதன்மையானவன் சாத்தானே. "பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்" (1 பேதுரு 5:5).

சாத்தானின் வீழ்ச்சியைப் பற்றி ஏசா 14:12, லூக் 10:18, 1 தீமோ 3:6 யிலும் காணலாம். “உலகமனைத்தையும் மோசம்போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் தள்ளப்பட்டது, அது பூமியிலே விழத்தள்ளப்பட்டது, அதனோடேகூட அதைச்சேர்ந்த தூதரும் தள்ளப்பட்டார்கள்”(வெளி 12:9). ஆம், அவர் “பலவான்களை ஆசனங்களிலிருந்து தள்ளி, தாழ்மையானவர்களை உயர்த்தினார்” (லூக் 1:52). பவுல், பிலிப்பியர் 2:5-8ல் இவ்வாறு கூறுகிறார். “கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது, அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்”. இயேவின் சாயலாய் படைக்கப்பட்ட நம்மில் அவரின் தாழ்மை வேண்டும். அவருக்கு மகிமையாய் வாழ, அவரின் சித்தம் செய்ய, பயனுள்ள பாத்திரமாய் நம்மை வனைந்திட, குயவனாம் அவர் கையில் நம்மைத் தாழ்த்தி அர்ப்பணிப்போமா? தேவன் தாமே அவரின் மகிமையின் சாட்சியாக வாழ நம்மைத் தகுதிப்படுத்துவாராக.

பயனுள்ள பாத்திரமாய் என்னை வனைந்திடும் என் இயேசுவே
குயவன் கை களிமண்ணாய் என்னைத் தாழ்த்தியே அர்ப்பணிக்கிறேன்
உம் சித்தம் செய்திடவே என்னைத் தகுதிப்படுத்திடுமே
உம் சித்தம் நான் செய்து என்றும் உமக்காய் வாழ்ந்திடுவேன்.

இனிதா மோசஸ்

## திருமறைப் பாட ஒழுங்குகள் - ஜுன் 2016

| நாள் | தியானப் பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்தி பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| 03-06-2016 | வழிபாட்டில் கடவுளின் வெளிப்பாடு | 1 இராஜா. 8:22-30 | வெளிப். 14:1-7 | மாற்கு 3:1-6 | 148 |
| 10-06-2016 | கடவுளின் படைப்பை பேணுதல் | ஆதியா. 1:28-31 | வெளிப். 22:1-5 | லூக்கா 1:21-31 | 104:1-23 |
| 17-06-2016 | சீடர் ஆக்குதல் | 1 இராஜா. 19:11-21 | ரோமர் 16:3-16 | யோவான் 1:35-42 | 34:11-22 |
| 24-06-2016 | இறைமக்கள்: கிறிஸ்துவின் மந்தை | ஆதியா. 35:1-15 | அப்போ. 16:11-15 | யோவான் 10:1-6 | 95 |

## ஆபிராம்!!!

நிம்ரோத் தேராகுவைப் பார்த்து, “ஆராம் இந்த காரியத்தைச் செய்தபடியால் அவனும் ஆபிராமோடே சாகவேண்டும். ராஜாவின் சித்தத்தைச் செய்யத் தடுத்தபடியால் இப்படி ஆகியது” என்றார்.

ஆராம் ஆபிராமினுடைய வழிகளின்மேல் பிரியமாய் இருந்தாலும் அதை சாராமல் வாழ்ந்து வந்தார். ஆராம் தன்னுடைய இருதயத்திலே, இராஜா இப்பொழுது ஆபிராமை பிடித்து வைத்துள்ளார். எப்படியெனினும் தீர்வு யார் பக்கம் வருகிறதோ அவர்கள் பக்கமாக சாய்ந்து கொள்ளலாம் என எதிர்பார்த்து காத்திருக்கையில்..... இராஜாவாகிய நிம்ரோத்தின் கட்டளை வருகிறது.

ஆபிராமும் ஆராமும் எரிகிற அக்கினிச் சூளையில் போடப்படுவதற்காக கொண்டுவரப்பட்டனர். அனைத்து மக்களும், இராஜாவின் வேலைக்காரரும், மற்றும் இராஜபுத்திரரும், பெண்களும், பிள்ளைகளும் குழுமியிருந்தனர். நிம்ரோத்தின் வேலைக்காரர்கள் அவர்கள் இருவருடைய மேலாடைகளைக் களைந்துவிட்டு, உள்ளாடைகளுடன், மெல்லிய துணிகளால் கைகளையும் கால்களையும் கட்டி, சூளைக்குள் எறிந்தனர்.

கர்த்தர் ஆபிராமிடம் அன்பாயும் மனதுருக்கமாயும் இருந்ததினால் அந்த சூளையில் வந்து அவரை விடுவித்தார். அக்கினி அவரை பட்சிக்கவில்லை. ஆனால் அவரது கை, கால்களில் கட்டப்பட்ட மெல்லிய துணிகள் எரிந்து சாம்பலானது. ஆகவே விடுவிக்கப்பட்ட ஆபிராம் தீயின் நடுவே உலாவிக்கொண்டு வந்தார். ஆனால் ஆராமோ, கர்த்தரிடத்தில் செம்மையாயிராதபடியால் தீக்கு இரையாகிப்போனார். அவர்களை எரிகிற அக்கினியினிடத்தில் தூக்கிக்கொண்டுவந்த பன்னிரண்டு பேர்களும் தீக்கிரையானார்கள்.

ஆபிராம் மூன்று நாட்கள் இரவும் பகலும் தீயின் நடுவே உலாவிக்கொண்டிருந்தார். இதைக் கண்ட வேலைக்காரர் இராஜாவினிடத்தில் வந்து ஆபிராம் உயிரோடுள்ள செய்தியை அறிவித்தனர். அவரது கை கால்களில் உள்ள கட்டுகள் தவிர, ஒன்றையும் அக்கினி பட்சிக்கவில்லை என்றனர்.

நிம்ரோத்தினால் நம்பமுடியவில்லை. ஆகவே தனக்கு நம்பிக்கைக்குரிய மற்றவர்களை அனுப்பி அச்செய்தி உண்மையா என அறிந்து வரச் சொன்னார். அவர்களும் அதே செய்தியைச் சொல்ல, நிம்ரோத் எழுந்து அக்காட்சியை காணச் சென்றார். அங்கு ஆபிராம் அக்கினியின் நடுவே நடந்து திரிவதைக் கண்டு ஆச்சரியமடைந்தார். உடனே ஆபிராமை

அக்கினிச் சூளையிலிருந்து வெளியேக் கொண்டுவர ஆட்களை அனுப்பினார். ஆனால் வேலையாட்களால் அச்சூளையினருகே செல்லமுடியாதபடி தீயினால் அவதிப்பட்டார்கள். அரசன் அவர்களைத் துரிதப்படுத்த, தீயினருகே சென்ற வேலையாட்களில் எட்டுபேரது முகத்தை தீ கருக்கிப்போட அவர்கள் மாண்டு போனார்கள்.

நிம்ரோத் ஆபிராமை நோக்கி, "ஓ பரலோகத்தின் தேவனுடைய ஊழியக்காரனே, அக்கினிச் சூளையினின்று விலகி என்னிடமாய் வாரும்" என்று கூறினார். நிம்ரோத்தின் சத்தத்தைக் கேட்ட ஆபிராம், சூளையிலிருந்து வெளியேறி ராஜாவிடம் வந்தார். ஆபிராம் வெளியே வந்தபோது அவர் தன்னுடைய கைகால்களின் கட்டுகளற்றவராய் தன்னுடைய உள்ளாடைகளுடன் வந்து நின்றதை ராஜாவின் அனைத்து வேலையாட்களும் கண்டனர்.

இராஜா அவரை நோக்கி, "நீ அக்கினியில் வெந்து போகாதது எப்படி?" என்றார். அதற்கு ஆபிராம், "வானத்தையும் பூமியையும் படைத்த ஆண்டவரை நான் நம்புகிறபடியால் அவர் என்னை தப்புவித்தார்" என்றார். ஆராமினுடைய உடலைத் தேடிப் பார்க்கபோய் அது காணப்படாமல் முழுவதுமாக தீயினால் சுட்டெரிக்கப்பட்டிருக்கக் கண்டார்கள். ஆராம் மரித்தபோது எண்பத்திரண்டு வயதாயிருந்தான். ஆபிராம் அக்கினியில் வெந்துபோகாததைக் கண்ட அனைவரும் அவரிடம் வந்து அவரைப் பணிந்து கொண்டனர்.

இதனைக்கண்ட ஆபிராம் அவர்களை நோக்கி, "என்னை பணிந்து கொள்ளாதீர்கள். உங்களை உண்டாக்கிய ஆண்டவரை பணிந்து கொள்ளுங்கள். அவரே என்னை இந்த அக்கினிச் சூளைக்கு விடுவித்தார். அவரே ஆவியையும் ஆத்துமாவையும் உண்டாக்கினவர். உங்கள் தாயின் கருவில் உங்களை உருவாக்கி, உங்களை இவ்வுலகிலே வாழச் செய்கிறவர். அவரே வேதனையில் இருக்கும் மக்களை விடுவிக்கிறவர்" என்றார்.

ஆராம் மரித்தது, ஆபிராம் தீயினின்று விடுவிக்கப்பட்டது அனைவருடைய கண்களுக்கும் இது ஆச்சரியமாக இருந்தது. நிம்ரோத் ஆபிராமுக்கு பல பரிசுப்பொருட்களையும் தன்னுடைய அரண்மனையின் தலைமை வேலைக்காரராகிய ஓனியையும் எலியேசரையும் கொடுத்தார். இராஜாவின் குமாரர்கள், வேலையாட்களும் கூட வந்து ஆபிராமுக்கு பொன் வெள்ளி, மற்றும் முத்துக்களையும் பரிசளித்தார்கள்.

ஆபிராம் சமாதானத்துடன் புறப்பட்டுப் போனான். அவனை நிம்ரோத்தின் வேலைக்காரர் முன்னூறு பேர் பின்தொடர்ந்தார்கள். ஆபிராம் வேலைக்காரர்களுடன் தன்னுடைய தகப்பனுடைய வீட்டிற்கு சென்று கர்த்தருடைய வழிகளில் நடந்தார்.

நன்றி: யாசேரின் புத்தகம் தமிழாக்கம் & தொகுப்பு: ஷீபா ரெஜினால்ட்

"கர்த்தாவே, அநுதினமும் நான் உம்மை நோக்கிக் கூப்பிட்டு.
உமக்கு நேராக என் கைகளை விரிக்கிறேன்." சங்கீதம் 88:9

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, "திருச்சபை ஜெபநாளில்" பங்கு பெற்றுத் தொடர்ந்து ஜெபித்துவரும் ஒவ்வொரு குடும்ப அங்கத்தினர்களுக்கும், சபையின் சார்பில் நன்றி கூறுகின்றோம். தொடர்ந்து மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும், ஜெபக் குழுக்களிலும், மற்றும் தினந்தோறும் ஜெப நேரம் ஒதுக்கி, ஜெபித்துத் திருச்சபைத் திருப்பணிகளைத் தாங்குங்கள். தேவ ஆசீர்வாதம் உங்களோடிருப்பதாக.

## துதிகள்

- இம்மட்டும் நம்மைப் பாதுகாத்து, பராமரித்து இப்புதிய ஆண்டைக் காணச்செய்த தேவனுக்கு நன்றி ஏறெடுப்போம். கர்த்தர் நமக்குத் தந்தருளிய சரீர சுகம், பெலம், ஜீவனுக்காக அவரைத் துதிப்போம்.
- திருச்சபை மூலமாக நாம் இம்மட்டும் பெற்றுக்கொண்ட ஐக்கியம் மற்றும் ஆன்மீக நன்மைகளுக்காக நன்றி கூறுவோம்.
- தேவன் நம் ஜெபத்தைக் கேட்டு நம் மத்தியில் பிரசன்னராயிருந்து, நம்மைத் தாங்கி பெலப்படுத்தியமைக்காக ஸ்தோத்திரம் கூறுவோம்.
- தொழிலாளர் தின ஆராதனை, செவிலியர் தின ஆராதனை, சிறுவர் ஆராதனை, சிறுவர் தியான முகாம் யாவும் சிறப்பாக நடைபெற கர்த்தர் பாராட்டின கிருபைகளுக்காகவும் அவரைத் துதிப்போம்.

## திருச்சபை திருப்பணிகளுக்கான ஜெப வேண்டுதல்கள்

- நம் குருவானவர்கள், சபை ஊழியர், மற்றும் அவர்களுடைய குடும்பத்தினருக்காக, திருப்பணிகளுக்காக,
- நம் திருச்சபையின் முன்னாள் குருவானவர்கள், அவர்கள் குடும்பத்தாருக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும்,
- நம் திருச்சபைகளைச் சேர்ந்த திருச்சபையினர் அனைவருக்காகவும், ஆங்காங்கே நடைபெறும் ஆராதனைகள், ஊழியங்கள், சிறுவர், வாலிபர், ஆண்கள், பெண்கள் மத்தியில் நடைபெறும் சிறப்பு ஊழியங்கள் மற்றும் முகாம் ஊழியங்களுக்காக,
- திருச்சபை மக்களுடைய நல்லுறவு பெலப்பட ஏதுவான நம் ஆன்மீக வளர்ச்சிக்காக,
- திருச்சபையின் நிர்வாகக்குழு அங்கத்தினர்களுக்காகவும், தேவ சித்தம் நிறைவேற்றும் வகையில் அவர் தம் பணிகளுக்காகவும்,
- திருச்சபைப் பணிகளை ஜெபத்தோடு உற்சாகமாகவும், உதாரத்துவமாகவும் தாங்கி வரும் திருச்சபை மக்களுக்காக,
- சிறுவர் வேதபாடசாலைத் திருப்பணிகளில் அர்ப்பணிப்போடு பங்கு பெறும் தேவபிள்ளைகளுக்காக, பயன்பெறும் நம் குழந்தைகளின் இறைபக்திக்காக,
- நமது திருச்சபையின் ஜெபக்குழுக்களுக்காக, ஐக்கிய, ஆன்மீக வளர்ச்சிக்காக, மிஷனரி ஊழியங்களுக்காக, தாங்கும் திருச்சபை மக்களுக்காக, மற்றும் மிஷனரி ஸ்தாபனங்களுக்காக

- தென்னிந்தியத் திருச்சபைக்காக, அனைத்துப் பேராயங்கள், நமது பேராயர்கள், குருவானவர்கள், திருப்பணியாளர் அனைவருக்காகவும், திருப்பணிகளுக்காக
- கொளகூர் மாதிரி கிராமத்தில் அமைத்துள்ள மருத்துவமனைக்கு அர்ப்பணமுள்ள செவிலியர் கிடைக்க ஜெபிப்போம்.

## நாட்டுக்காக ஜெப வேண்டுதல்கள்

- இந்திய நாட்டுக்காக, நாட்டின் தலைவர்கள் மற்றும் அதிகாரம் வகிப்போர் அனைவருக்காகவும், தேசத்தின் வளத்துக்காகவும், வளர்ச்சிக்காகவும், மனிதநேயமும், மத நல்லிணக்கமும் பெருகவும் ஜெபிப்போம். நல்ல இயற்கைச் சூழ்நிலைகள், மழை வளத்துக்காக ஜெபிப்போம்.
- அரபு ஐக்கியக் குடியரசுக்காக, அதன் தலைவர்களுக்காக, இங்கு வாழும் அனைத்துமக்களின் சமாதானத்துக்காக,
- உலகத் தலைவர்களுக்காக, சமாதானத்துக்காக, உலகில் தேவ ஆளுகைக்காக

## நமது ஜெப மன்றாட்டுகள்

